# குழந்தை உணவுச் சட்டத்தின் கீழ் எவை தடை செய்யப்பட்டுள்ளன.

## What is Banned Under IMS act

### குழந்தை உணவுச்சட்டம் ஏன்?

18ம் நூற்றாண்டு வரை மனித இனம் தாய்பாலை மட்டுமே குடித்து வளர்ந்தது. 19 ஆம் நூற்றாண்டில் விலங்கின் பால் உற்பத்தி அதிகரித்தது. அதை சமாளிக்க விலங்கின் பாலையும் குழந்தைகள் குடிக்கலாம் என்று அறிமுகப்படுத்தப்பட்டது. 1930 இல் அதன் தீமைகள் உணரப்பட்டன. ஆனால் மருத்துவத்துறையில் உள்ளோரின் ஆதரவு, வியாபார நிறுவனங்களின் முறைகேடான விளம்பர உத்திகள், இலவசங்கள் ஆகியவற்றால் பால் பவுடர், குழந்தை உணவு வியாபாரம் கொடிகட்டிப்பறக்க ஆரம்பித்தது. இதனால் தாய்பால் கொடுக்கும் பழக்கம் குறைந்தது. விளைவு கோடிக்கணக்கான குழந்தைகள் சத்துக்குறைவு, எடைக்குறைவு, வியாதிகள் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டனர். இறந்து போயினர். **இன்று நாம் உணர்ந்துள்ள உண்மை; நாம் கடையில் விலை கொடுத்து வாங்குவது குழந்தை உணவுகளையும் பால் பாட்டில்களையும் அல்ல; நோய்களையும் சாவையும் தான் என்பதே.** இதை உணர்ந்த இந்திய அரசு 1992 இல் குழந்தை உணவுச்சட்டத்தை இயற்றியது.

ஆனால் குழந்தை உணவு உற்பத்தி நிறுவனங்கள் சட்டத்தில் உள்ள ஓட்டைகளை பயன்படுத்தி தொடர்ந்து விளம்பரம் செய்து வருகின்றன. இதனால் தாய்மார்களுக்கு தாய்ப்பாலூட்டுதல் மற்றும் வீட்டில் தயாரிக்கும் இணை உணவை ஊட்டுதல் ஆகியவற்றின் மேல் இருக்கும் நம்பிக்கை தகர்ந்து வருகின்றது. எனவே 2003 இல் மாற்றியமைக்கப்பட்ட இச்சட்டத்தை மக்கள் சரியாக புரிந்து கொண்டு நாடு உயர உதவ வேண்டும் என்ற நோக்கத்தில் சட்டத்தின் முக்கிய சரத்துக்களை தருகிறோம்.




**1. இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகள் உண்ணும் எல்லா வகை உணவுகள், பால் பாட்டில்கள் ஆகியவற்றின் விற்பனையை ஊக்குவிக்க தடை செய்யப்பட்டுள்ளது.**

கம்பெனி பிரதிநிதிகள், தாய்மார்களையோ (அ) மருத்துவர்களையோ, சந்திக்கக் கூடாது. பள்ளிகளில் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்குவது கூடாது.

**2. மாற்றுப்பால், குழந்தை உணவுகள், பால் பாட்டில்கள் ஆகியவற்றைப் பற்றிய எல்லாவகை விளம்பரங்களும் தடை செய்யப்பட்டுள்ளது.** செய்தித்தாள்களில், வார இதழ்களில், ரேடியோ, தொலைக்காட்சி, செல்போன், சினிமா மூலம் விளம்பரம் செய்வது, பாட்டிலில் பால் குடிப்பது போன்ற காட்சிகளை சினிமா, தொலைக்காட்சியில் காட்டுவது, நாள்காட்டியில், பஸ் பின் கண்ணாடியில் அச்சிடுவது யாவும் சட்டப்படி குற்றமே.




**3. மாதிரி உணவுகள் (sample) பரிசுப் பொருட்கள் ஆகியவறை தாய்மார்களுக்கோ, மருத்துவர்களுக்கோ (அல்லது) மருத்துவம் சார்ந்த துறையில் உள்ளவர்களுக்கோ. விநியோகிக்க தடை.**




**4. குழந்தை உணவுகள், பால் பாட்டில்கள், குழந்தை உணவு பற்றிய வெளியீடுகள்.**

விநியோகிப்பது தடை செய்யப் பட்டுள்ளது இந்த நிறுவனங்களின் வெளியீடுகள் பெரும்பாலும் தவறான செய்திகளையே வெளியிட்டு தாய்ப்பாலூட்டுவதன் முக்கியத்தை குறைத்து மதிப்பிட வைத்து விடுகின்றன.




5. குழந்தை உணவு டின், அட்டைப் பெட்டிகளில் தாய், சேய் படங்கள் போட தடை. 6 மாதத்திற்குட்பட்ட குழந்தைகளுக்கு என எழுத தடை. இந்நிறுவனங்கள் தாய், சேய் படங்கள், கரடி, பறவை கார்ட்டுன் போன்றவற்றை அச்சிட்டு அந்த உணவுகளே மிகச் சிறந்தவை என்று காட்டிக்கொள்கின்றன. கொழு, கொழு குழந்தை படங்களால் தாய்மார்களும் கவரப்பட்டு ஏமாற்றப்படுகிறார்கள்.

6. (அ) மருத்துவமனைகளில், மருந்துக் கடைகளிலும் காட்சிப்பொருட்கள் வைப்பதற்கு தடை
(ஆ) மருத்துவர்/ அவர் தம் குடும்பத்தினர் செலவுகளை ஏற்பதற்கு தடை
(இ) கருத்தரங்குகள், தொடர் கல்வி பயிற்சி வகுப்புக்கள் ஆராய்ச்சி போன்றவற்றிற்க்கு உதவி செய்ய தடை.

7. இந்நிறுவன பிரதிநிதிகளுக்கும், வியாபாரிகளுக்கும் வியாபார அடிப்படையில் தொகை/பரிசு வழங்குவது போன்ற வியாபார ஊக்குவிப்புக்கு தடை.

இச்சட்டத்தை மீறுபவர்களுக்கு 2 முதல் 5 வருடம் வரை சிறைத் தண்டனை அல் ரூ.5000 வரை அபராதம் உண்டு.

**நீங்கள் என்ன செய்யலாம்?**

1. மேற்கண்ட விபரங்கள் எல்லா தர மக்களையும் சென்றடைய செயலாற்றுங்கள்.
2. சட்டத்திற்கு புறம்பாக நிறுவனம் செயல்படு தெரிந்தால் உங்கள் பகுதி MLA. M மருத்துவத்துறை செயலர், மாவட்ட கலெக் நீதிபதி, போலிஸ் கண்காணிப்பா ஆகியவர்களிடம் முறையீடு செய்து சட்ட நடவடிக்கை எடுக்க கோருங்கள்,
3. தொலைக்காட்சியில், சினிமாவில் பாட்டில் ப கொடுப்பது போன்ற காட்சிகள் வந்தால் உட ஆபரேட்டர்களுக்கு போன் செய்து நிறுத் சொல்லுங்கள், அதிகாரிகளுக்கு முறை செய்யுங்கள்.
4. தவறு செய்யும் நிறுவனங்களுக்கு தவ சுட்டிகாட்டி கடிதம் எழுதுங்கள். உங்கள் க நகலை கீழ்காணும் முகவரிக்கு தொ நடவடிக்கைக்காக அனுப்புங்கள்.

**ADDRESSES**

1. Ministry of Women and Child Development
   A Wing, Shastri Bhawan, New Delhi - 110001.
2. Director General of Health Service, Ministry of Healt
   Nirman Bhawan, New Delhi - 110001.
3. Dr.Arun Gupta, BPNI BP-11, Pitampura, Delhi - 110

10வது ஐந்தாண்டு திட்டத்தில் குழந் உணவு:

குழந்தை உணவு பற்றிய புதிய வழி காட்டுத இந்திய அரசு 10வது ஐந்தாண்டுத் திட்டத் இணைத்துள்ளது. அவை

1. குழந்தை பிறந்த ஒரு மணி நேரத்திற் தாய்ப்பால் தரவேண்டும்.
2. ஆறு மாதம் முடிய தாய்ப்பால் மட்டு தரவேண்டும். (4-6 மாதம் என்பது 2001 முந்திய அறிவுரை).
3. ஆறு மாதத்திற்குப் பிறகு வீட்டில் தயாரிக் இணை உணவுடன் தொடர்ந்து தாய்ப்பா இரண்டு வயது முடியும் வரையோ அல் அதற்கு மேலுமோ கொடுக்க வேண்டும்.

**குழந்தைகளே நமது எதிர்காலம் ; உதவுங்கள்.**

**Mrs.உமா செல்வராஜ்**
இவீமா. தலைவர் 2006 - 07
இவீமா. 298 சேலம்.

**Dr.அருண்குப்தா**
இந்திய ஒருங்கிணைப்பாளர்,
பிப்பிஎன்ஐ டெல்லி.

**Dr.M.நடராஜ**
ரோ.மா.ஆளுனர்2006 -
ரோ.மா. 2980 கும்பகோ

**Rtn.Dr.A.முத்துசாமி** பிப்பிஎன்ஐ, ரோட்டரி இன்னர்வீல் ஒருங்கிணைப்பாளர்,
145, கீழவீதி சிதம்பரம் - 608 001. website : www.bpni.org.

மணிபாரதி, சிதம்பரம். ✆ 221603